செ.வெ. எண்: 719　　　　　　　　　　　　　　　　　　　　　　நாள்: 03.12.2011

# பத்திரிக்கை செய்தி

டிசம்பர் திங்கள் 3ம் நாள் அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தை கொண்டாடும் விதமாக மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. செல்விஇராமஜெயம் அவர்கள் தியாகராயநகரில் அமைந்துள்ள மதுரம் நாராயணன் மையத்தில் உள்ள மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுடன் அளவளாவியும் இனிப்புகள் வழங்கினார். அதேபோன்று கே.கே. நகரில் அமைந்துள்ள மாநில வள மற்றும் பயிற்சி மையத்தில் உள்ள மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கும், திருவான்மியூரில் அமைந்துள்ள பாத்வே (Pathway) என்ற மையத்தில் உள்ள மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கும் இனிப்புகள் வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, அரசுச் செயலாளர் திருமதி. கண்ணகிபாக்கியநாதன், இ.ஆ.ப., அவர்களும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் திரு. ப. ரா. சம்பத், இ.ஆ.ப., அவர்களும் உடன் இருந்தனர்.

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.